**செய்தி வெளியீடு எண் : 1306** **நாள் : 02.08.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தமிழகத்தின் சில மாவட்டங்களில் வரும் நாட்களில் எதிர்பார்க்கப்படும் கனமழை குறித்து மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றிவிரிவான ஆய்வினை காணொளி காட்சி மூலமாக நடத்தினார்.**

தமிழ்நாடு மின்சார வாரிய தலைமை அலுவலகத்தில் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில், தமிழகத்தின் சில மாவட்டங்களில் வரும் நாட்களில் எதிர்பாக்கப்படும் கனமழை குறித்து மின்துறை சார்பாக எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றிவிரிவான ஆய்வு மேற்கொண்டார். தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப, இயக்குநர்/பகிர்மானம், திரு.மா.சிவலிங்கராஜன் தொடர்புடைய தலைமைப் பொறியாளர்கள், மேற்பார்வை பொறியாளர்கள் மற்றும் உயர் அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் 04.08.2022 வரை எதிர்பார்க்கப்படும் **சிகப்பு எச்சரிக்கை** விடுத்த மாவட்டங்களான கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் திண்டுக்கல் **ஆரஞ்சு எச்சரிக்கை** விடுத்த மாவட்டங்களான விருதுநகர், ஈரோடு, மதுரை, மேலும், **மஞ்சள் எச்சரிக்கை** விடுத்த மாவட்டங்களான தூத்துக்குடி, திருச்சி, கரூர், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் வேலூர் ஆகிய மாவட்டங்களின் தலைமைப் பொறியாளர்களுடனும் மற்றும் மேற்பார்வை பொறியாளர்களுடனும் மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வினை நடத்தினார்.

சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளர்கள், தலைமைப் பொறியாளர்கள் அனைவரும் தகுந்த முன்னெச்சரிக்கையுடன் செயல்படுமாறும், தேவையான JCB

வாகனங்களை முன்கூட்டியே தயார் நிலையில் வைத்துக் கொள்ளுமாறும், பணியாளர்களுக்கு தேவையான அனைத்து பாதுகாப்பு உபகரணங்களையும் அளித்து பாதுகாப்பான முறையில் மின்கட்டமைப்பை சீர்செய்யும் பணியில் ஈடுபடுமாறும், தேவைப்படின் அருகாமையில் உள்ள மின்பகிர்மான வட்டங்களிலிருந்து பணியாட்களை பணியில் ஈடுபடுத்துமாறும், அனைத்து வாரிய வாகனங்களையும் தயார் நிலையில் வைத்துக்கொள்ளுமாறும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து அலுவலர்களுக்கும் உத்தரவிட்டார்.

சீரமைப்பு பணிகளில் ஈடுபடும் அனைத்து அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள் மிகுந்த கவனத்துடனும், உரிய பாதுகாப்புடனும் செயல்படுமாறு அனைவரையும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார். மேலும், இத்தகைய இயற்கை இடர்பாடுகளின் போது மாவட்ட நிர்வாகத்தினருடன் எப்போதும் தொடர்பில் இருக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மின் இணைப்பு துண்டிக்கப்பட்டால் முன்னுரிமை அடிப்படையில் அனைத்து மருத்துவமனைகள் மற்றும் குடிநீர் இணைப்புகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

சம்பந்தப்பட்ட அனைத்து மேற்பார்வை பொறியாளர்களும் தமது அலுவலகங்களில் இதற்கென தனியாக குழு அமைத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும், சேதாரங்கள் குறித்தும் ஆய்வு செய்து உடனடியாக அனைவருக்கும் தகவல் தெரிவிக்க வேண்டும் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மழைக்காலங்களில் பொதுமக்கள் மின்சாதனங்களை எச்சரிக்கையுடன் கையாளுமாறும், அறுந்து கிடக்கும் மின் கம்பிகளின் அருகில் செல்ல வேண்டாம் எனவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மின் கட்டமைப்பில் ஏற்படும் சேதாரங்களை பொறுத்து சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளர்கள் தேவைப்படும் பணியாளர்கள் மற்றும் தளவாடப் பொருட்களுடன் சீரமைப்பு பணிகளை மேற்கொள்ள தயார் நிலையில் இருக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அலுவலர்களுக்கும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுடன் பேசுகையில்

மாண்புமிகு தளபதி அவர்களுடைய ஆணைக்கிணங்க தமிழகத்தில் குறிப்பிட்ட மாவட்டங்களில் பெய்து வரக்கூடிய கனமழையின் காரணமாக மின் வாரியத்தில் மின்சார விநியோகத்தில் ஏற்படக்கூடிய பாதிப்புகளை உடனுக்குடன் சரிசெய்து சீரான மின் விநியோகம் செய்வதற்கான ஆய்வு கூட்டம் இன்று நடைபெற்று முடிந்திருக்கிறது. குறிப்பாக சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்ட கன்னியாகுமரி, திருநெல்வேலி, தென்காசி, தேனி, நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களிலும், ஆரஞ்சு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள விருதுநகர், ஈரோடு, மதுரை மற்றும் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தூத்துக்குடி, திருச்சி, கரூர், நாமக்கல், சேலம், தருமபுரி, கிருஷ்ணகிரி, திருப்பத்தூர், ராணிபேட்டை மற்றும் வேலூர் ஆகிய குறிப்பிட்ட மாவட்டங்களில் ஏற்கனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின் படி ஒரு மாத காலமாக சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பாக 15.06.2022 அன்று தொடங்கப்பட்டு 31.07.2022 வரை 10,77,910 பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளது. அதிலும் குறிப்பாக 2,147 துணைமின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் முடிக்கப்பட்டு சீரான மின் விநியோகத்திற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக 6,09,000 மரக் கிளைகள் மின் வழித்தடங்களில் இருந்து தமிழகம் முழுவதும் அகற்றப்பட்டு மின் விநியோகத்திற்கான ஏற்பாடுகள் சீர் செய்யப்பட்டிருக்கின்றன. 35,273 மின்கம்பங்கள் பழுதடைந்த மின் கம்பங்கள் புதிதாக மாற்றப்பட்டு இப்பொழுது பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளன. 19 வகையான 10,77,910 பராமரிப்பு பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. இந்த மழைக்காலங்களில் எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாத அளவிற்கு சீரான மின் விநியோகம் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவினை வழங்கினார்கள். நேற்று இரவு மின் வாரியத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு உடனடியாக ஆய்வு கூட்டங்களை நடத்தி ஆங்காங்கே இரவு நேரங்களிலும் உயர் அதிகாரிகளை பணியிலே அமர்த்தி சீரான மின் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்று உத்தரவுகளை வழங்கினார்கள். குறிப்பாக மின் வாரியத்தை பொறுத்தவரை இந்த சிவப்பு, ஆரஞ்சு மற்றும் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் எந்த விதமான பாதிப்புகளும் இல்லாத அளவிற்கு சீரான மின் விநியோகத்திற்காக அனைத்து

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக மின் கம்பங்களைப் பொறுத்தவரை 1,33,200 மின் கம்பங்கள் தயார் நிலையில் இருக்கின்றன. அதேபோல, மின் கம்பிகளைப் பொறுத்தவரை 10,000 கிலேர மீட்டர் அளவிற்கு இருப்பு இருக்கின்றன. அதேபோல 500 KVA மின்மாற்றிகளைப் பொறுத்தவரை 85 எண்ணிகையிலான மின்மாற்றிகள் உட்பட அனைத்துமே தயார் நிலையில் உள்ளன. எனவே குறிப்பாக மின் வாரியத்தை பொறுத்தவரை மழை எந்த அளவு பெய்தாலும் எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாத அளவிற்கு ஏற்கனவே முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் பராமரிப்பு பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக இன்னும் இரண்டு மூன்று நாட்களில் வரக்கூடிய மழையை எதிர்கொள்வதற்கு உயர் அதிகாரிகள் கொண்ட குழு அமைக்கப்பட்டு அந்தந்த மாவட்டங்களில் சீரான மின் விநியோகத்திற்கு சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. குறிப்பாக ஒவ்வொரு மாவட்டங்களிலும் இரவு நேரத்திலும் உயர் அதிகாரிகள் தமிழகம் முழுவதும் இந்த மழை பெய்யக் கூடிய மாவட்டங்களில் சிறப்பு பணியை மேற்கொள்வார்கள்.

திருநெல்வேலி, தென்காசி மாவட்டங்கள் பிரிக்கப்பட்டபோது தென்காசிக்கு என்று ஒரு தனியாக சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு அந்த சிறப்பு பணிகளை மேற்கொள்வதற்கும், மாவட்டங்கள் தோறும் உயர் அதிகாரிகள் இரவு நேர பணிகளையும் கவனித்து அனைத்து இடங்களிலும் சீரான மின் விநியோகம் செய்யப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. JCB உட்பட லாரிகள் தொடங்கி தேவையான உதிரிபாகங்கள் வரை அனைத்தும் தயார் நிலையில் இருக்கின்றன. தமிழ்நாட்டைப் பொறுத்தவரைக்கும் எந்தவிதமான பாதிப்புகளும் இல்லாத அளவிற்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மாண்புமிகு முதலமைச்சரின் வழிகாட்டுதலின்படி எடுக்கப்பட்டிருக்கின்றன. கடந்த ஆண்டு பெய்த மழையினால் ஏற்பட்ட பாதிப்புகளை முன்கூட்டியே சரிசெய்யகூடிய பணிகள் தொடங்கப்பட்டு ஏறத்தாழ 60 விழுக்காடு பணிகள் நிறைவு செய்யப்பட்டிருக்கின்றன. தூத்துகுடியை எடுத்துக் கொண்டால் 12 இடங்களில் பாதிப்பு இருக்கின்றது, அதில் 05 இடங்களில் பணிகள் நிறைவு பெற்று இருக்கின்றன மீதம் இருக்கக்கூடிய 07 இடங்களில் பணிகள் இனிமேல் தொடங்கப்பட இருக்கின்றன. அதேபோல, கன்னியாகுமரியைப் பொறுத்தவரை ஒரு துணைமின் நிலையம் கடந்த ஆண்டு மழையினால் பாதிக்கப்பட்டது. அதை உயர்த்துவதற்கான பணிகள் தொடங்கப்பட்டு விரைவாக அதுவும் நிறைவு செய்யப்பட இருக்கின்றது.

எனவே, இந்த மழைக்காலத்தைப் பொறுத்தவரையில் இந்த மழையை எதிர்கொள்வதற்கு மின்சார வாரியம் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்ட மின்னகத்தைப் பொறுத்தவரை வரபெற்ற 10,00,000 புகார்களுக்கும் மேல் தீர்வு காணப்பட்டுள்ளது. இது ஒரு வரலாற்று சாதனை ஆகும்.

சென்னையில் ஏற்கனவே தரைமட்டத்தில் இருந்த பில்லர் பாக்ஸ்களின் உயரம் ஒரு மீட்டர் அளவிற்கு உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த வருடம் பெரம்பூர் பி & சி மில்ஸ் துணை மின் நிலையம் பெரிதும் பாதிக்கப்பட்டது. தற்போது துணைமின் நிலையம் மேம்படுத்தப்பட்டுள்ளது. 2,505 RMU–க்கள் பொறுத்தப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. சென்னையில் உள்ள ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிகளுக்கும் பொறுப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டு தேவையான பணிகள் ஆய்வு செய்து முன்னுரிமையின் அடிப்படையில் நிதிகள் ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. கடந்த நாட்களில் திரு.வி.க நகரில் 10 இடங்களில் RMU–க்கள், சைதாப்பேட்டையில் 140 இடங்களில் RMU–க்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, வரக்கூடிய மழையை எதிர்கொள்ளுவதற்கும், அடுத்த ஆண்டு மின் நுகர்வுக்கு தேவையான அளவிற்கு கட்டமைப்பினை மேம்படுத்தும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒன்றிய அரசு ஒரு டன் நிலக்கரிக்கு 203 டாலர் கொடுத்து வாங்க ஆர்டர் சுற்றறிக்கை அனுப்பியுள்ளது. ஆனால் தமிழ்நாட்டில் ஒரு டன் நிலக்கரி 143 டாலருக்கு மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இந்தியாவிலேயே, தமிழ்நாட்டில் தான் குறைந்த விலையில் நிலக்கரி கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் மின்சார வாரியத்தின் வரலாற்றிலேயே இல்லாத அளவாக ஒரு ஆண்டில் 9,048 கோடி நிதி ஒதுக்கீடு செய்து மின்சார வாரியத்தை காப்பாற்றியவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மின் கட்டணம் மாற்றத்திற்கு பின்பு ரூ.3,500 கோடி கூடுதலாக கொடுக்கிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மின்சார வாரியத்தில் பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடசென்னை அனல் மின் நிலையம் ஸ்டேஜ்–3 பணிகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. டிசம்பர் மாதத்திற்குள் பணிகள் முடியும், எண்ணூரை பொறுத்தவரை 2024–ல் உற்பத்தியைத் தொடங்குவதற்கு உண்டான

பணிகள் விரைவு படுத்தப்பட்டிருக்கின்றன, உடன்குடி அனல் மின் நிலையம் தொடர்பான பணிகள் விரைவாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன, 6,000 மெகாவாட் சூரிய மின் உற்பத்தி பூங்கா அமைப்பதற்கான அறிவிப்புகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. அதேபோல் நீர் மின் நிலையம் மூலம் 10,500 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டு டி.பி.ஆர் தயாரிக்கும் பணிகள் நடத்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 24 மணி நேர மின் நுகர்வோர் சேவை மையமான மின்னகத்தில் ஆய்வு மேற்கொணடார்.

**கடந்த 15.06.2022 முதல் 31.07.2022 வரை தமிழ்நாடெங்கும் மின் தடங்கல்களை குறைப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சிறப்புப் பராமரிப்பு பணிகள் பற்றிய விவரம் வருமாறு :**

| வ. எண் | பணியின் வகை | அலகு | 31-07-2022 வரை மேற்கொள்ளப் பட்டவை |
|---|---|---|---|
| 1 | துணை மின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் | எண்ணம் | 2,147 |
| 2 | மரக்கிளைகள் அகற்றப்பட்டவை | எண்ணம் | 6,09,653 |
| 3 | பழுதடைந்த மின்கம்பங்கள் மாற்றப்பட்டவை | எண்ணம் | 35,273 |
| 4 | சாய்ந்த நிலையிலுள்ள மின்கம்பங்களை சரிசெய்தல் | எண்ணம் | 28,207 |
| 5 | தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகளை சரிசெய்தல் | இடங்கள் | 56,778 |
| 6 | புதிய மின்கம்பங்கள் இடைச்செருகல் செய்யப்பட்டவை | எண்ணம் | 22,722 |
| 7 | மின்கம்ப தாங்கு கம்பிகள் புதுப்பித்தல் | எண்ணம் | 34,810 |
| 8 | பலவீனமான பழுதடைந்த பீங்கான்கள் மாற்றப்பட்டவை | எண்ணம் | 95,591 |
| 9 | பழுதடைந்த மின்பெட்டிகள் சரிசெய்தல் | எண்ணம் | 2,770 |
| 10 | பழைய மின்கம்பிகள் மாற்றுதல் (கி.மீ) | கி.மீ. | 1,674 |
| 11 | பலவீனமான இணைப்பு கம்பிகளை மாற்றுதல் | எண்ணம் | 65,757 |
| 12 | AB ஸ்விட்ச் பராமரிப்பு | எண்ணம் | 33,644 |
| 13 | நில இணைப்பு/கார்டிங் அமைத்தல் | எண்ணம் | 12,082 |
| 14 | மின்கம்பிகளை தரம் உயர்த்துதல் (கி.மீ) | கி.மீ. | 2,257 |

| | | | |
|---|---|---|---|
| 15 | மின்மாற்றி கட்டமைப்பு (DT Structure) பராமரிப்பு | எண்ணம் | 54,303 |
| 16 | மின்மாற்றி (DT) பராமரிப்பு | எண்ணம் | 17,372 |
| 17 | வெளியே தெரியும் மின்வடங்களை புதைத்தல் | எண்ணம் | 581 |
| 18 | புதிய இரு மின்கம்ப கட்டமைப்பு அமைத்தல் | எண்ணம் | 308 |
| 19 | மின்பெட்டிகள் பராமரிப்பு | இடங்கள் | 1,980 |
| | **மொத்தம்** | | 10,77,910 |

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in